10 பாடம்

# பயப்படாதே

***இடிமுழக்கம், மின்னல், இருட்டுவேளை இவைகளுக்கெல்லாம் நீ பயந்ததுண்டா? ஆனால், தேவன் நம்மோடிருப்பதால் நாம் எதற்கும் பயப்படத்தேவையில்லை. இன்றைய பாடத்தின்மூலமாக நமக்குத் தேவன் தரும் செய்தியும் 'பயப்படாதே' என்பதே.***

தேவாலயத்திலே, சகரியா எனும் ஓர் ஆசாரியன் தூபங் காட்டிக் கொண்டிருந்த வேளையிலே, தேவதூதனைக் கண்டார். தூபபீடத்தின் வலது பக்கத்திலே அவருக்குத் தரிசனமானான். ஆனால், தூதனைக் கண்டு கலங்கிப் பயமடைந்தான். இந்த நிகழ்வை நாம் முன்னரே பார்த்தோம். அப்போதும்கூட தேவதூதன் மூலமாக தேவன் சகரியாவுக்குக் கொடுத்த செய்தி, "சகரியாவே பயப்படாதே" என்பதுதான்.

மேலும் சகரியாவிடம், "உனது ஜெபமும் உன் மனைவியின் ஜெபமும் கேட்கப்பட்டது. உங்களுக்கு ஒரு குழந்தை பிறக்கும். அக்குழந்தையின் பெயர் யோவான்" எனும் நற்செய்தியையும் சொன்னான்.

'தேவ அருளினால் தேவ குமாரனே மரியாளின் வயிற்றில் பிறப்பான்' என்ற செய்தியை மரியாளுக்குச் சொல்ல தேவன் விரும்பினார். எனவே, தேவன் காபிரியேல் எனும் தூதனை மரியாளிடம் அனுப்பினார்.

தேவசித்தப்படி, பரிசுத்த ஆவி மரியாள்மேல் நிழலிடும், அதன்மூலம் தேவகுமாரனை மரியாள் பெறுவாள்; இந்தச் செய்தியை தேவதூதன் மரியாளுக்குக் கொண்டுவந்தார். ஆனாலும் இச்செய்தியைக் கொண்டுவந்த தூதன் மரியாளைப் பார்த்தவுடனே தேவன் சொல்லியபடி முதலில் மரியாளை வாழ்த்தினார். ஆனாலும் அந்த வாழ்த்து தலைக்கேட்டு மரியாள் பயப்



**மனன வசனம்**

**பயப்படாதிருங்கள்; இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். லூக்கா 2:10.**

பட்டாள். அப்போதும் தேவன் தமது காபிரியேல் தூதன்மூலம் அவளுக்குச் சொன்னது, ''பயப்படாதே; மரியாளே பயப்படாதே'' என்பதே. அந்த மென்மையான வார்த்தைகள் கலங்கித் தவித்த மனதில் கலக்கத்தை நீங்கியது.

பொதுவாக எதிரிகள் ஒருவருக்கொருவர் வாழ்த்து கூறுவது கிடையாது. ஆனால் நண்பர்கள் ஒருவரையொருவர் மகிழ்ந்து, நெகிழ்ந்து வாழ்த்துவார்கள். தேவாதி தேவனும் நம்மை நேசிப்பதால், நம்மை தம் பிள்ளைகளாக, சிநேகிதராக எண்ணுகிறார். எனவேதான் வாழ்த்துவதோடு மட்டும் நின்றுவிடவில்லை. 'பயப்படாதே' என்று நமக்கு நம்பிக்கையையும் ஆறுதலையும் தருகிறார்.

சகரியாவுக்கு மட்டுமல்ல; மரியாளுக்கு மட்டுமல்ல; மந்தைகளைக் காவல் செய்துகொண்டிருந்த மேய்ப்பர்களுக்கும் கூட 'பயப்படாதிருங்கள்' என்கிற நற்செய்தியைக் கொடுத்தார் தேவன் .

மேசியாவின் வருகையை மிகுந்த ஆவலோடு எதிர்நோக்கியிருந்த மேய்ப்பர்கள் வயல்வெளியில் தங்கியிருந்தனர். அவ்வாறு தங்கியிருந்து தங்கள் மந்தைகளைக் காத்துக் கொண்டிருந்தார்கள். அந்த வேளையில் கர்த்தருடைய தூதன் அங்கே வந்து நின்றார். அந்தப் பகுதி முழுவதும் பிரகாசமாக ஜொலித்தது. மேய்ப்பர்களோ பயந்து நடுங்கினார்கள்.

அப்போதும் தேவன் தமது தூதன்மூலமாக அவர்களுக்குக் கொடுத்த செய்தி, ''பயப்படாதேயுங்கள்'' என்பதே. 'பயப்படாதே' என்று சொல்லி நிறுத்திவிடாமல் அடுத்து ஒரு நற்செய்தியையும் தேவன் கொடுத்தார்.

தேவதூதன் அவர்களை



## செய்தி

**தேவன் நமது நண்பர்;**
**நாம் அவரைக் குறித்துப் பயப்படவேண்டாம்.**

நோக்கி, "இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று கர்த்தராகிய கிறிஸ்து எனும் இரட்சகர் உங்களுக்கென்றே தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்" என்று கூறினார்கள்.

அதன் பின்னர் இனிய பாடலைப் பாடினார்கள். தேவன் தம் பிள்ளைகளுக்குப் 'பயப்படாதே' எனும் ஆறுதலான வார்த்தையையும் அதைத் தொடர்ந்து நற்செய்தியையும் தருகிறார்.

மேய்ப்பர்கள் இப்போது கலக்கமின்றி சந்தோஷமாக இயேசு தேவனைக் காணச் சென்றார்கள்.

என் அன்பே! நட்போடும், பாசத்தோடும் நம்முடன் பேசும் தேவன் இருக்க, நீ ஏன் பயப்படவேண்டும்?

**செய்முறை:** *இன்றைய பாடத்தை நன்குபடி. பின்னர் கீழ்க்காணும் கேள்விகளுக்குப் பதில் எழுது.*

1. **இந்தப் பாடத்தின்மூலம் தேவன் நமக்குத் தரும் மேலான செய்தி என்ன?**
2. **சகரியாவிடம் 'பயப்படாதே' என்ற நற்செய்தியைச் சொன்னவர் யார்?**
3. **மரியாளிடம் 'பயப்படாதே' என்ற நற்செய்தியைச் சொன்னவர் யார்?**
4. **மேய்ப்பர்களிடம் 'பயப்படாதே' என்ற நற்செய்தியைச் சொன்னவர் யார்?**

புதிர் 10

1. ______________________________
2. ______________________________
3. ______________________________
4. ______________________________